RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் அக்டோபர் 27 * 2025 * மலர் -1 * இதழ்-147 * VOL-1 * ISSUE-147 விலை ரூ.3 * பக்கம் -4

### காங்கேயம் அருகே

## ரியல் எஸ்டேட் அதிபர் இரும்பு ராடால் அடித்துக்கொலை!

### உறவினர் வெறிச்செயல்!!

காங்கேயம்,அக்.27–

காங்கேயம் அருகே ரியல் எஸ்டேட் அதிபர் இரும்பு ராடால் அடித்துக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக அவரது உறவினரை போலீசார் தேடி வருகின்றனர்.



கொலைசெய்யப்பட்ட ஈஸ்வரமூர்த்தி



கொலையாளி ராஜ்குமார்

இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் மேட்டுப் பாளையம் ஊராட்சி வரக்காளிபாளையதை சேர்ந்தவர் ஈஸ்வரமூர்த்தி(42). இவரின் உறவினர் ராஜ்குமார்( 45). இவர்கள் இருவரும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தனர். இதனால் இருவருக்கும் இடையேபிரச்சனைஅடிக்கடி இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் நேற்று இரவு ஈஸ்வரமூர்த்தி தனது தந்தை கிட்டுசாமி (எ) கிருஷ்ணமூர்த்தியுடன் பைக்கில் வீட்டில் இருந்து புஷ்பகிரி வெள்ளகோவில் ரோட்டில் வரக்காளி பாளையம் பிரிவு அருகே சென்று கொண்டிருந்தார்.

அப்போது ராஜ்குமார் என்பவர் ஓட்டிவந்த காரை விட்டு முன்னால் சென்று கொண்டிருந்த ஈஸ்வரமூர்த்தியின் பைக் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். இதில் ஈஸ்வரமூர்த்தியும் அவரது தந்தை கிட்டுச்சாமியும் கீழே விழுந்தனர். பின்னர் காரிலிருந்து இரும்பு ராடை எடுத்து வந்து ராஜ்குமார் கீழே விழுந்து கிடந்த ஈஸ்வரமூர்த்தியின் தலை மற்றும் தோள்பட்டையில் சரமாரி அடித்தார். பின்னர் ராஜ்குமார் காரை ஓட்டி வந்து அவர் மீது ஏற்றினார்.

இதில் ஈஸ்வரமூர்த்தி சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இதைக் கண்ட ராஜ்குமார் சம்பவ இடத்திலேயே தனது காரை நிறுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார். படுகாயமடைந்த தந்தை கிட்டுச்சாமியை அக்கம் பக்கத்தினர் மீட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இறந்துபோன ஈஸ்வரமூர்த்தியின் பிரேதம் காங்கேயம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து வெள்ள கோவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய ராஜ்குமாரை தேடி வருகின்றனர்.

இறந்த ஈஸ்வரமூர்த்திக்கு திருமணமாகி இரண்டு ஆண் வாரிசுகளும் கொலை செய்த ராஜ்குமாருக்கு இரண்டு பெண் மற்றும் ஒரு ஆண் வாரிசும் உள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### கரூர் சம்பவத்தில் 41 பேர் சாவு:

# 20 குடும்பத்தினர் மட்டுமே சென்னை வருகை!

## நடிகர் விஜய் கருருக்கு வர கட்சியினர் வலியுறுத்தியதால் பரபரப்பு!!

சென்னை, அக்.27–

கரூர்சம்பவத்தில் 41 பேர் சாவு சம்பவத்தில் 20 குடும்பத்தினர் மட்டுமே சென்னை வந்துள்ளனர். பிற குடும்பத்தினர், கட்சியினர் நடிகர் விஜய் கரூருக்கு வர வேண்டும் என வலியுறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.26 ம் தேதி நடந்த தவெக பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை கரூர் நகர போலீஸார் விசாரித்த நிலையில், உயர்நீதிமன்றம் அக்.3 ம் தேதி சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து உத்தரவிட்டது. அக்.5ம் தேதி முதல் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வந்த நிலையில், உச்ச நீதிமன்றம் அக்.13ம் தேதி இந்த வழக்கை சிபிஐக்குமாற்றிஉத்தரவிட்டது.

இதையடுத்து, அக்.16ம் தேதி சிபிஐ அதிகாரிகள் கரூர் வந்தனர். அக்.17ம் தேதி சிபிஐயிடம் வழக்கு ஆவணங்களை எஸ்ஐடி ஒப்படைத்தது. அக்.19ம் தேதி சிபிஐ அதிகாரிகள் சிலர்தீபாவளிக்காக சொந்த ஊர்களுக்கு சென்ற நிலையில், இன்ஸ்பெக்டர் நிலையிலான அதிகாரி கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கி எஸ்ஐடி ஒப்படைத்த ஆவணங்களை ஆய்வு செய்து வருகிறார்கள் . மேலும் போலீஸ் பதிவு செய்த எப்.ஐ.ஆரை சிபிஐ நீதிமன்ற உத்தரவுப்படி தவெக வினரிடம் கொடுத்தனர்.

இதற்கிடையே இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நடிகர் விஜய் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 41 குடும்பத்தினரும் இன்று சென்னை அருகே உள்ள மாமல்லபுரத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். திங்கட்கிழமை விஜய் அவர்களைச்சந்திப்பார் என்றும், மதிய உணவுக்குப் பிறகு அவர்கள் புறப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்காக தனியார் விடுதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அரங்கில் நடைபெறுமா அல்லது விஜய் ஒவ்வொரு குடும்ப த்தினரையும் தனித் தனியாகச் சந்திப்பாரா என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை. முதல் கட்டமாக, 20 குடும்பங்கள் இந்த சந்திப்பில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் . மீதமுள்ள 21 குடும்பங்கள் வர மறுத்துவிட்டன என கூறப்படுகிறது. இதுகுறித்து மற்ற குடும்பத்தினர், நடிகர் விஜய் தங்கள் வீடுகளுக்கே வந்து சந்திப்பதற்குப் பதிலாக, சென்னைக்கு வரவழைப்பது ஏன் என்றுகேட்டுள்ளனர். மேலும் புயல் வரும் நிலையில், திங்கட்கிழமை சென்னைக்கு வரவழைப்பது ஏன் என்றும் சில குடும்பங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. அதோடு நாங்கள் 30வது நாள் காரியங்களை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட சூழலில் நாங்கள் எப்படி விஜயை பார்க்க முடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கும் விஜயின் திட்டம் தள்ளிப் போகலாம் என்றும் கூறுகிறார்கள். மேலும் பாதிக்கப்பட்ட 41 குடும்பங்களில், 39 குடும்பங்களுக்கு ஏற்கனவே தமிழக வெற்றிக் கழக நிதியில் இருந்து தலா ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய இரண்டு குடும்பங்களுக்கு சில காரணங்களால் பணம் தருவது தாமதமாகியுள்ளது.

### தாராபுரம் அருகே பரபரப்பு:

## வீட்டில் தூக்குப்போட்டு மணப்பெண் தற்கொலை!

### இன்று திருமணம் நடைபெற இருந்த நிலையில் பரிதாபம்!!

தாராபுரம், அக்.27 –

தாராபுரத்தை அடுத்த பெரமியம் பகுதியைச் சேர்ந்த முருகேசன் என்பவரது மகள் ரத்தினம்மாள் (30). ரத்தினம்மாளுக்கும், வெள்ளகோவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் ஞாயிற்றுக்கிழமை (அக்.26) திருமணம் நடைபெற இருந்தது. திருமண விழாவில் பங்கேற்பதற்காக உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு திருமண அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ரத்தினம்மாளின் பெற்றோர் வெளியூர் சென்று விட்டு, வெள்ளிக்கிழமை இரவு வீட்டுக்கு திரும்பி வந்த போது, மணப்பெண் ரத்தினம்மாள் வீட்டுக்குள் தூக்கில் தொங்கி நிலையில் இருந்துள்ளார். உடனடியாக அவரை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், ரத்தினம்மாள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து மூலனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். திருமணம் நடக்க இருந்த நிலையில், புது மணப்பெண் திடீரென தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் உறவினர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



## மண்டலவாடியில் உங்களுடன் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

திருப்பத்தூர் அக்.27

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை வட்டாரம், மண்டலவாடியில் தனியார் கல்லூரியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவசௌந்தரவள்ளி தலைமை வகித்தார்.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, குத்து விளக்கு ஏற்றி, முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் கல்வியாளர் ஜி . பொன்னுசாமி ஜோலார்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் சத்யாசதீஷ்குமார் மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா ஊராட்சி மன்ற ஏலகிரி மலை ஊராட்சி மன்ற தலைவர் ராஜ ஸ்ரீகிரி வேலன், தலைவர்கள் மகேஷ், நந்தினிஅருள் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### வாணியம்பாடியில்

## காங். சிறுபான்மை துறை மாநில தலைவர் முஹம்மத் ஆரிப் பிறந்த நாள் விழா!

வாணியம்பாடி, அக்.27

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஜீவா நகர் பகுதியில், காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை மாநில தலைவர் முஹம்மத் ஆரிப் பிறந்த நாள் விழா கொண்டாடப் பட்டது.



நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.சதாம் ஹுசைன் தலைமை வகித்தார். நகர தலைவர் ஃபரீத் அஹமத், சிறுபான்மை துறை மாவட்ட துணைத்தலைவர் அர்மான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொதுச் செயலாளர் தாஜுதீன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் இரண்டு பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை நகர நிர்வாகிகள், தொண்டர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு கொண்டனர். முடிவில் சிக்கந்தர் நன்றி கூறினார்.





கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA, மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர்.M.S.பிரசாந்த்,IAS,ஆகியோர்கள், கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட,தியாகதுருகம் ஒன்றியம்,விருகாவூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், திராவிட மாடல் அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்"முகாமினை தொடங்கி வைத்தனர்.இதில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் 'சக்தி' அறிமுகம்:

## சிறு தொழில் முனைவோருக்கான சிறிய தொகை சொத்துக் கடன் திட்டம்!

கோயம்புத்தூர், அக்.27–

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் ஒன்றான ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட், தன்தேரஸ் நாளில் 'ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் சக்தி' என்ற புதிய மைக்ரோ சொத்துக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வணிக மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக சிறு தொழில்முனைவோர், வர்த்தகர்கள், சுய தொழில் செய்பவர்கள் மற்றும் சம்பளம் பெறும் வாடிக்கையாளர்களுக்கு எளிதான நிதி உதவி வழங்குவதே இதன் நோக்கம். குறைந்த ஆவணத் தேவைகள், நெகிழ்வான கால அவகாசங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்களை பிணையாக ஏற்றுக்கொள்வது போன்ற அம்சங்கள் இதன் சிறப்பம்சங்களாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் சொத்தைப் பயன்படுத்தி வணிக வளர்ச்சியையும் தனிப்பட்ட முன்னேற்றத்தையும் அடைய முடியும். இந்த அறிமுகம் குறித்து நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான சாய் கிரிதர் அவர்கள், "ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் சக்தி நிதி உள்ளடக்கத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. முறைப்படுத்தப்பட்ட கடனை அணுகுவதில் சவால்களை எதிர்கொள்ளும் சிறு வணிகர்களுக்கு இது ஒரு புதிய வாய்ப்பை உருவாக்கும்," என்றார். மேலும், தொழில்நுட்பம் மற்றும் திறமையான செயல்முறைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிரமமில்லாத அனுபவத்தை வழங்குவதே நிறுவனத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார். இதற்கு முன் திஷா வீட்டு வசதி கடன்திட்டம் மூலம் பொருளாதார ரீதியாக பலவீனமானமற்றும்குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக, சக்தி திட்டம் 75 லட்சம் ரூபாய் வரை சிறிய தொகை சொத்துக் கடன்களை வழங்குகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு வணிக மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான புதிய நிதி வாய்ப்புகளை திறக்கிறது. ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் நிறுவனம் தனதுஅனுபவம்,தொழில்நுட்பம் மற்றும் வலுவான அமைப்புகளின் மூலம் பாதுகாப்பான அடமானக் கடன்களில் நம்பகத்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது.



முன்னாள் எம்எல்ஏ சி.வி. ராஜேந்திரன் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பண்ணந்தூர் பழனிச்சாமி சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்

## ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேல்நிலைப்பள்ளி பொன் விழா!

ஆம்பூர்.அக்.27

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வடபுதுப்பட்டு பகுதியில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது.

இப்பள்ளி கடந்த 1975 ஆம் ஆண்டு துவங்கப்பட்டநிலையில்50ஆம்ஆண்டு பொன்விழா பள்ளி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ராஜசேகர்தலைமை வகித்தார். முன்னாள் மாணவர்கள் முரளி ரத்தினம், மதன் குமார், ராதாகிருஷ்ணன்,கோ.வெங்கடேசன், எம்.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னாள் மாணவன் வி.கருணாகரன் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாளர் வேலாயுதம் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி பொன் விழா கல்வெட்டு திறந்து வைத்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து முன்னாள் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பள்ளி வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கிய முன்னாள் மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகம் மற்றும் விழா கமிட்டி சார்பில் கௌரவித்தனர். நிகழ்ச்சியில் கடந்த 1975 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை இப்பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு நண்பர்களுடன் பள்ளி வகுப்பறைகளுக்கு சென்று பள்ளிக் கால நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

மேலும் பழைய மாணவர்கள் நண்பர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு ஒருவருக்கு ஒருவர் கட்டித்தழுவி மகிழ்ந்தனர்.



நிகழ்ச்சியில் ஜமீன் ஊராட்சி மன்ற தலைவர் குணசுந்தரி வரதராஜன், கீழ் முருங்கை ஊராட்சி மன்ற தலைவர் நவமணி, வட புதுப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜெயலட்சுமி, வெங்கிலி ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி இனியகுமார், எஸ்.ரவி, சரவணன், வழக்கறிஞர் ஏ.சி.தேவகுமார் உள்ளிட்ட முன்னாள்மாணவர்கள்மற்றும்குடும்பத்தினர், பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மாமன்னர் மருது சகோதரர்களின் 224 வது நினைவு தினத்தையொட்டி அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மதுரை மாவட்டக் கழக சார்பாக மாவட்ட கழக செயலாளர்கள் கா. டேவிட் அண்ணாதுரை, ஷ. ராஜலிங்கம், ஆர். செல்வபாண்டி ஆகியோர் தலைமையில் தெப்பக்குளத்தில் அமைந்துள்ள மருது பாண்டியர்கள் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.இதில் வளர்மதி ஜெபராஜ், தமிழ்நாடு ஹோட்டல், தவமணி, மாவூத் வேலவன், ஜீவிதா நாச்சியார், மா. சௌந்தரபாண்டியன், அழகாதேவன், ஜான் ஜெயசீலன், அருவுக ராஜா, போர்வாள் மாரியப்பன், பா. பாலசுப்பிரமணியன், கேசவ பாண்டியம்மாள், முனிச்சாலை வெங்கடேஷ், தில்லை.ரவிச்சந்திரன், சி.சரவணகுமார், பி.ஐ. கோடீஸ்வரன், சேது. ராம்குமார், பெ. லோகநாதன், எஸ்.ஆர். ஜி.சேகர், பீ. பி.குளம்செந்தில், பா.ராம்குமார், பூக்கடை மாரியப்பன், செந்தமிழ்செல்வி, சேகர், வி.எம்.வி.மரக்கடை கஜேந்திரன், முத்துக்குமரன், தியாகராஜன், பரசுராம், சங்கரன், புலிப்பாண்டி, செல்வராஜ், அய்யனார், பதுமினி, செந்தூரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானலில் தொடர் மழை காரணமாக பழனி பிரதான சாலையில் மரம் சாய்ந்து மண் சரிவு!




கொடைக்கானல்,அக்.27

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் முக்கிய சுற்றுலா இடமாக இருந்து வருகிறது. இன்று தமிழகம் மட்டுமின்றி பல்வேறு பகுதிகளை சேர்ந்த சுற்றுலாபயணிகளும் வருகை தருகின்றனர்.

தொடர்ந்து கொடைக்கானல் மட்டுமின்றி பல்வேறு பகுதிகளில் கடந்த சில தினங்களாகவே மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக ஆங்காங்கே லேசான மண்சரிவு களும் மரங்களும் சாய்ந்து வருகிறது. தொடர்ந்து நேற்று பெய்த மழையின் காரணமாக நேற்று இரவு பழனி பிரதான சாலையில் மண் சரிவுடன் மரமும் சாய்ந்தது. இதனால் பல கிலோமீட்டர் தூரம் வாகனங்கள் அணிவகுத்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த ராம கிருஷ்ணன் மற்றும் அவருடன் இருந்த நண்பர்கள் அப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மரத்தை அகற்றி மண் சரிவை சரி செய்தனர்.

மேலும் பழனி பிரதான சாலையில் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களை அகற்ற வேண்டும் என என்பதே அனைவரின் கோரிக்கையாக இருந்து வருகிறது.

# போலீசாரின் அதிரடி சோதனையில் சிக்கிய 75 கிலோ குட்கா ஒருவர் கைது!



விழுப்புரம்,அக்,27

விழுப்புரம் மாவட்ட காவல் துறை போலீ சாரின் அதிரடி சோதனையில் சிக்கிய 75 கிலோ குட்கா ஒருவர் கைது.அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன் உத்தரவுப்படி, திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரசூர் கூட்ரோடு அருகில் காவல் உதவி ஆய்வாளர்கள் திரு. அன்பழகன், திரு.லியோ சார்லஸ் மற்றும் காவலர்கள் தலைமையிலான போலீசார் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த *TN 31 AK 2613* என்ற பதிவெண் கொண்ட *Ashok Leyland dost* வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் ஐந்து மூட்டைகளில் இருந்தது தெரியவந்தது. எனவே எதிரியை கைது செய்து அவரிடம் இருந்து ஐந்து மூட்டைகளில் 50 ஆயிரம் மதிப்புள்ள 75 கிலோ எடை கொண்ட குட்கா பொருள்கள் மற்றும் *Ashok Leyland dost* வாகனம் கைப்பற்றப்பட்டு

எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## புதுக்கோட்டை அருகே

# ஆலங்குடியில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாம்!

புதுக்கோட்டை அக்,27

புதுக்கோட்டைமாவட்டம் ஆலங்குடியில் நலன் காக்கும் ஸ்டாலின்திட்ட சிறப்பு மருத்துவ முகாம் அர சு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. அறந்தாங்கி சுகாதாரம் மற்றும் ஆலங்குடி வட்டம் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நல ம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு உயர் மருத்துவ சேவை முகாம் நடந்தது.முகாமிற்கு மாவட்ட கலெக்டர் அருணா தலைமை தாங்கினார். முகாமில் மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் சிறப்பு விருந்தி னராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றிமுகாமைதொடங்கி வைத்தார்.முகாமில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளரும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கேபி கேடி தங்கமணி தெற்கு ஒன்றிய செயலாளர் அருவடிவேல் ,ஆலங்குடி தாசில்தார் வில்லியம் மோசஸ் அறந்தா ங்கி மாவட்ட சுகாதார அலுவலர் விஜயகுமார். திருவரங்குளம் வட்டார மருத்துவர் ராம்சந்தர் ,ரமா ராமநாதன், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், செயல்அலுவலர்கோமதி மற்றும் கவுன்சிலர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் தொடங்கி வைத்தார்.

# தமிழக கேரளா எல்லையான வாளையாறில் ரூ.2.54 கோடி ஹவாலா பறிமுதல்!

## ராஜஸ்தான் இளைஞர் கைது!!

கேரளா,அக்.27

கேரளா நோக்கி காரில் ரூ.2.54 கோடி ஹவாலா பணத்தை கடத்திச் சென்ற ராஜஸ்தான் மாநில இளைஞரை கேரள சுங்க அதிகாரிகள் கைது செய்தனர் கோவை வழியாக கேரளாவிற்கு ஹவாலா பணம் கடத்தப்படுவதாக கேரள சுங்கத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.இதைஅடுத்து வாளையாறு சுங்கச்சாவடி அருகேநேற்றுசுங்கத்துறை ஆய்வாளர் பிரசாந்த் தலைமையிலான அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கோவையில் இருந்து கேரளா நோக்கி வந்த கார் ஒன்றை சுங்க அதிகாரிகள் நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையின் போது காரில் கட்டு கட்டாக ரூபாய் நோட்டுகள் இருந்ததும், அதற்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து



காரில் இருந்த 2.54 கோடி பணத்தை பறிமுதல் செய்த சுங்க அதிகாரிகள், காரை ஓட்டி வந்த ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பவானி சிங் (33) என்ற இளைஞரை கைது செய்தனர். இதை அடுத்து பறிமுதல் செய்த பணத்தை பாலக்காட்டில் உள்ள வருமான வரித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், குண்டடம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர்பெலிக்ஸ் ராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ஜெயந்தி ஆகியோர் உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் செந்தமிழ் செல்வன் தலைமையில் கோவை திமுக தலைமை மாவட்ட அலுவலகத்தில் வர்த்தகர் அணி ஆய்வுக்குழு கூட்டம் மாவட்ட அமைப்பாளர்,கோவை மாநகராட்சி பொது சுகாதாரக்குழு தலைவர் மாரிசெல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் தென்னவன் செல்வம்,துணை தலைவர் தங்கவேலு,துணை அமைப்பாளர்கள் போனஸ் பாபு, சந்திரசேகர்,சந்தீப் ராஜ், மகேந்திரன்,ஜெயபால், சதீஸ்குமார்,ஆர். கே.பாபு, செந்தில் குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நகராட்சி பகுதியில் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பழைய நகராட்சி அலுவலகத்தை புனரமைத்து திருமணம் மண்டபம் மற்றும் வணிக வளாகம் அமைப்பட்டு வருவதை நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதனன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் நகராட்சி ஆணையர் எம்.ஆர்.வசந்தி, உதவி பொறியாளர் திரு. ராபட் கிளைவ் உட்பட பலர் உள்ளனர்.






பழனியில், தமிழக முதல்வரின் உத்தரவை மதிக்காத, மீன் வளத்துறை அதிகாரிகளை கண்டித்து, மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதற்கு முன்னாள் கவுன்சிலர் ப.இ.தண்டபாணி தலைமை வகித்தார். மீனவர் சங்க நிர்வாகிகள் பாலமுருகன், வழக்கறிஞர் ஆழ்வார் பாண்டியன், ஆகியோர் முன்னிலைவகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக முத்து, ஜெயகணேஷ், சரவணபாண்டியன், கிரிராஜா, பூ மணிகண்டன், ராஜா ஆகியோர் பங்கேற்றனர். மேலும் 500க்கும் மேற்பட்டோர் குடும்பத்தாருடன் பங்கேற்றனர்.



## திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

# காலியாக உள்ள அலுவலக உதவியாளர் இரவு காவலர் பணிக்கான நேர்காணல்!

திருவெண்ணெய்நல்லூர், அக்.27

திருவெண்ணெய்நல்லூர்ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் இரவு காவலர் பணிக்கான நேர்காணல் நடைபெற்றது .

திருவெண்ணைநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரவு காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் காலி பணியிடங்கள் தலா ஒரு இடம் உள்ளது. இந்த காலி பணியிடத்திற்கு 150 பேர் விண்ணப்பம் செய்து இருந்தனர். அவர்களுக்கான நேர்காணல் தேர்வு இன்று நடைபெற்றது.

வருகை புரிந்த விண்ணப்பதாரர்களிடம் தேர்வு குழு நியமன உறுப்பினர்கள் ஒன்றிய குழுதலைவர் ஓம்சிவ சக்திவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் முல்லை, ஒன்றியக் குழு துணை தலைவர் கோமதி நிர்மல்ராஜ் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆவணங்கள் சரிபார்ப்பு எழுதுதல், வாசித்தல், தகுதி திறன், கேள்விகள் கேட்டு நேர்காணல் செய்தனர். தேர்வுகளை மண்டல அலுவலர் கிருஷ்ணகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் பால சுப்பிரமணியன் ஆகியோர் மேற்பார்வை செய்தனர்.




## அரசூரில் இருந்து சூரசம்கார விழாவை முன்னிட்டு

# கையில் வேல் காவடியுடன் 500 பேர் மயிலம் முருகன் கோவிலுக்கு பாத யாத்திரை!

திருவெண்ணெய்நல்லூர், அக்.27

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள அரசூரில் இருந்து கையில் வேல் காவடியுடன் மயிலம் முருகன்கோவிலுக்கு நடைபயணமாக 500பக்தர்கள் செல்லும் பாதயாத்திரை நிகழ்வு நடைபெற்றது. வருகிற 27திங்கள் கிழமை முருகன் கோவில்களில் கந்த சஷ்டி சூரசம்ஹார விழா நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு அரசூர் வராகி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது அதன் பின் தர்மஜாக்ரன் மாநில பொறுப்பாளர் ராமராஜன் சேகர் பாதயாத்திரை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

இந்த பாத யாத்திரையில் அரசூர், ஆலங்குப்பம், காந்தலவாடி, கிராமம், இருவேல்பட்டு, தென்மங்கலம், ஏனாதிமங்கலம், பேரங்கியூர், ஆனத்தூர், செம்மார் திருவெண்ணெய்நல்லூர், அரசூர், கெடிலம், கானை பண்ருட்டி விழுப்புரம், ஆகிய பகுதிகளைச் சார்ந்த 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஒன்றாக இணைந்து அரசூரில் இருந்து மயிலம் கோவிலுக்கு தேசிய நெடுஞ்சாலையில் சாலை ஓரமாக மயிலம் முருகனை சாமி தரிசனம் செய்ய சென்றனர்.

# தனிஷ்க் ஜுவல்லரியில் உங்கள் பழைய தங்கத்திற்கு புதிய நம்பிக்கை தொடர்கிறது!

## நவம்பர் 30 வரை சிறப்பு எக்ஸ்சேஞ்ச் திருவிழா நீடிக்கப்படுகிறது!!




தனிஷ்க் ஜுவல்லரியில் உங்கள் பழைய தங்கத்திற்கு புதிய நம்பிக்கை தொடர்கிறது. நவம்பர் 30 வரை சிறப்பு எக்ஸ்சேஞ்ச் திருவிழா நீடிக்கப்படுகிறது.

கோவை, அக். 27

டாடா குழுமத்தின் தங்க நகை விற்பனை பிராண்டான தனிஷ்க் ஜூவல்லரியில் தீபாவளி பண்டிகை காலத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட தங்கநகை எக்ஸ் சேஞ்ச் திருவிழா வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைத்த அமோக வரவேற்பை கருத்தில் கொண்டு நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை தனிஷ்க்கின் ஏரியா பிசினஸ் மேலாளர் சிவரஞ்சினி;

அம்பாள் குழுமத்தின் ஆப்ரேஷன்ஸ் மேலாளர் ராஜா; மற்றும் தனிஷ்க் பொள்ளாச்சி கிளையின் கிளை மேலாளர் விஜய் பிரபாகர் சனிக்கிழமை அன்று தெரிவித்தனர்.

இந்த சிறப்பு எக்ஸ் சேஞ்ச் திருவிழா மூலம் வாடிக்கையாளர்கள் தங்களின் 24 காரட் முதல் 9 காரட் வரையான பழைய தங்க நகைகளைஅதன் மதிப்பு குறையாமல் லேட்டஸ்ட் டிசைனுக்கு எக்ஸ்சேஞ்ச் செய்து கொள்ளலாம். (வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கும் டிசைனுக்கு ஏற்ற மாதிரி டிசைன்கட்டணம் + ஜி.எஸ்.டி. மட்டும் இருக்கும்).

அடுத்து வெட்டிங் சீசன் (முகுர்த்த காலம்) வரவுள்ளதைமுன்னிட்டு பல்வேறு சிறப்பு டிசைன்கள் தனிஷ்க் ஜூவல்லரியில் இருக்கும்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# கேப்டன் ஆலயத்தில் சிறப்பு பூஜை, அன்னதானம் வழங்கும் விழா!

திருப்பூர்,அக்,27

சென்னை கோயம்பேட்டில் உள்ள கேப்டன் ஆலயத்தில் கழகப் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் தலைமையில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் விசைத்தறி பி ஆர் குழந்தைவேல் ஏற்பாட்டில் சிறப்பு பூஜை மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ராயபுரம் பா.ஆனந்த். மற்றும் மாவட்ட துணைச்செயலாளர்வசந்த் ஆர் யுவராஜ்,திருப்பூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், கொங்குநகர் பகுதி பொறுப்பாளர் ரத்தினம், குமார்நகர் பகுதி செயலாளர் சண்முகராஜா,மாவட்ட கேப்டன் மன்ற துணைச்செயலாளர் முத்துகுமார்பாண்டி, மாவட்ட தொழிற்சங்க தலைவர் ரங்கநாதன், மாவட்ட தொழிற்சங்க துணைத்தலைவர் ஆடலரசு, ஒன்றிய அவைத்தலைவர் ரவிச்சந்திரன்,ஒன்றிய துணைச்செயலாளர் தரணி பாபு.மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# பழைய துபாயின் கலாச்சார உணவு பயணங்கள் - லோன்லி பிளானட் 2026!

## உலகளாவிய சிறந்த அனுபவங்கள் ஒன்றாக தேர்வு!!



சென்னை , அக்.27

பழைய துபாயின் சுவை மிகு பாரம்பரியத்தை இந்தியா கண்டறியும் உணவுப் பயணம், லோன்லி பிளானட் டீன் “பெஸ்ட் இன் டிராவல் 2026” பட்டியலில் இடம்பிடித்த, உலகின் சிறந்த பயண அனுபவங்கள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கௌரவம் துபாயின் பண்பாட்டு பல்வகைத் தன்மையையும், 200க்கும் மேற்பட்ட தேசிய இனங்களின் சுவைகளால் வடிவமைக்கப்பட்ட அதன் சிறப்பான உணவு மரபையும் வெளிப்படுத்துகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க துபாய் கிரீக் கரையில் அமைந்துள்ள புர் துபாய் மற்றும் தீரா பகுதிகள், பாரம்பரிய சுவைகள் மற்றும் உள்ளூர் பொருட்களைக் கொண்ட உணவகங்களுக்காக பிரசித்தி பெற்றவை. இப்பகுதிகளில் நடைபெறும் உணவுப் பயணங்கள், பாரம்பரியம், விருந்தோம்பல் மற்றும் வரலாற்றை இணைக்கும் சிறந்த அனுபவமாக, சுற்றுலாப் பயணிகளுக்கு குடியிருப்போருக்கு கட்டாயமாகச் செய்ய வேண்டிய செயல் மாறியுள்ளது.துபாய் கார்ப்பரேஷன் பார் டூரிசம் அண்ட் காமர்ஸ் மார்க்கெட்டிங் (விசிட் துபாய்) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இஸ்லாம் காஜிம் கூறியதாவது:

“இந்த அங்கீகாரம் துபாயை ஒரு உலகளாவிய கலாச்சார மற்றும் உணவுத் தலமாக வலுப்படுத்துகிறது. பாரம்பரியத்தை காப்பாற்றி, தனித்துவமான உணவு அனுபவங்களை வழங்கும் எங்கள் நகரத்தின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது.” லோன்லி பிளானட் துணைத் தலைவர் டாம் ஹால் கூறியதாவது: “எங்கள் பெஸ்ட் இன் டிராவல் 2026 பட்டியல், பயணிகளையும் உள்ளூர் கலாச்சாரத்தையும் ஆழமாக இணைக்கும் அனுபவங்களை கொண்டாடுகிறது.

பழைய துபாயில் ஒரு உணவுப் பயணம் அதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும் — இது பயணிகள் துபாயின் சுவையான உணவு உலகில் மூழ்கடித்து, நகரத்தின் உண்மையான தனிச்சிறப்பை உருவாக்கும் சுவைகள், மனிதர்கள் மற்றும் கதைகள் வெளிப்படுத்துகிறது.



புதுக்கோட்டை அருகே ஆலங்குடி மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு ஒரு கோடி மதிப்பில் ஆடிட்டோரியத்தை அமைச்சர் ரிப்பன் வெட்டி மாணவிகளுக்கு அர்ப்பணித்தார்.

## புதுக்கோட்டை அருகே

# ஆலங்குடி மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு ஒரு கோடி மதிப்பில் ஆடிட்டோரியம்!

## அமைச்சர் ரிப்பன் வெட்டி மாணவிகளுக்கு அர்ப்பணித்தார்!!

புதுக்கோட்டை அக்,27

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மகளிர் மேல்நிலை பள்ளிக்கு கடந்த 2022ம் ஆண்டு ஒரு கோடி மதிப்பில் ஆடிட்டோரியம் கட்ட அமைச்சர் மெய்யநாதன்,அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். ஆடிட்டோரியம் பணிகள் முடிந்து நேற்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்தலைமையில் ரிப்பன் வெட்டி ஆடிட்டோரியத் தை பள்ளி மாணவிகளுக்கு அர்ப்பணித்தார். பின்னர் விழா மேடையில் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் கவுசல்யா அனைவரையும் வரவேற்று பேசி னார்.

விழாவில் திரு வரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளரும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவருமான கே பி கே டி தங்கமணி,பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்ம் ஆலங்குடி தாசில்தார் வில்லியம் மோசஸ் திருவரங்குளம் வட்டார மருத் துவர் ராமச்சந்தர் அறந்தாங்கி மாவட்ட கல்வி அலு வலர் மாயக்கிருஷ்ணன் நகர செயலாளர் பழனிகுமார் மற்றும் துணைத் தலைவர் செங்கோல் பேரூ ராட்சி கவுன்சிலர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விழா வில் மாவட்ட தொண்டரணி துணை அமைப் பாளர் சரவணன் பள்ளி ஆசிரியர் ஆசிரியைகள் மாணவிகள் அலு வலக பணியாளர்கள் பேரூராட் சி தூய்மை பணியாளர்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர்கழக திமுக நிர்வாகிகள் கலந்து கொண்ட னர்.

# செந்துறையில் பைக்குகள் நேருக்கு நேர் மோதல்; தொழிலாளி பலி!

நத்தம், அக்,27

திண்டுக்கல் மாவட்டம் பழனிமஞ்சநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் முருகானந்தம்(51).

இவர் நத்தம் அருகே செந்துறைகருத்த நாயக்கன் பட்டியில் குடும்பத்துடன் மாமனார் வீட்டில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் மாலை தனது பைக்கில் செந்துறைக்கு சென்றுவிட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். செந்துறை பாலம் பகுதியில் வந்து கொண்டிருந்த போது எதிரே திருநூத்துபட்டியை சேர்ந்த பகவதி(20) என்பவர் ஓட்டி வந்த பைக் அவர் மீது மோதியது. இதில் முருகானந்தம் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியானார்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் பைக்கில் சென்ற பகவதி மற்றும் அவரது நண்பர் சசிகுமார் ஆகியோர் படுகாயமடைந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து போலீஸ்சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



## கிருஷ்ணகிரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு:

# முகாமில் பிஜேபி மாநில இளைஞர் அணி தலைவர் எஸ் ஜே சூர்யா கலந்து கொண்டார்!

மத்தூர் அக் 27

கிருஷ்ணகிரியில் தனியார் கம்பெனி வேலை வாய்ப்பு முகாமை பிஜேபி இளைஞர் அணி சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு தலைமை தாங்கினார். மேலும் தர்மபுரி மாவட்ட தலைவர் சரவணன் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாநில இளைஞரணி தலைவர் எஸ் ஜே சூர்யா கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில செயற்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம், முன்னாள் மாநில தலைவர் முனாவரி பேகம், மாவட்ட பொதுச் செயலாளர் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி நகர தலைவி விமலா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசிய எஸ் ஜே சூர்யா கட்சியின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களின்நலனுக்காகமட்டுமே இம்முகம் நடத்தப்படுகிறது என்றும் இதில் கலந்து கொண்டுள்ள அனைத்து மகளிர்களுக்கும் நிச்சய பணி என்ற குறிக்கோளோடு இம்முகம் தொடங்கப்பட்டுள்ளது.

# வீட்டின் அருகில் விளையாடி கொண்டு இருந்த சிறுமியின் மீது சுவர் இடிந்து விழுந்து விபத்து!

## படுகாயம் அடைந்த சிறுமி சிகிச்சை பலனின்றி பலி!!



ஆம்பூர்.அக். 27

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர்அடுத்த குமாரமங்கலம் பகுதியை சேர்ந்தவர் பூவரசன்.

இவரது மகள் ஹரிவர்ஷினி( 2 வயது).இவர் வீட்டின் அருகே விளையாடி கொண்டிருந்த போது சுரேஷ் என்பவரின் வீட்டின் பக்கவாட்டு சுவர் இடிந்து சிறுமி மீது விழுந்துள்ளது.

இதில் சிறுமி பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேல்சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கே சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளர். சம்பவம் குறித்து உமராபாத் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டு வருகின்றனர்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், விவசாயிகளுக்கு வேளாண் பயிர்கடன்கள் வழங்கினார்கள்.

# ஆறு மாதம் முதல் ஐந்து வயது குழந்தைகளுக்கு வரை வைட்டமின் ஏ திரவம் வழங்கப்படும்!

## மாவட்ட ஆட்சியர் ஏகே கமல் கிஷோர் அறிவிப்பு!!



தென்காசி அக.27

தென்காசி மாவட்டம் முழுவதும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு வாழ்வுத்துறையின் மூலம் அக்டோபர் 27 முதல் 31ம் தேதி வரை (புதன்கிழமை நீங்கலாக) அனைத்து வட்டாரங்களிலும் வைட்டமின் –A திரவம் வழங்கும் முகாம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார் ஆறு மாதம் முதல் ஐந்து வயது குழந்தைகள் அனைவரும் பயன்பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது தென்காசி மாவட்டம் முழுவதும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் அக்டோபர் 27 முதல் 31ஆம் தேதி வரை (புதன்கிழமை நீங்கலாக) அனைத்து வட்டாரங்களிலும் வைட்டமின் –A திரவம் வழங்கும் முகாம் நடைபெற உள்ளது. வைட்டமின்A திரவம் 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான சுமார் 85,319 குழந்தைகளுக்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வைட்டமின்A திரவம் 6 மாதம் முதல் 11 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு 1 மி.லி. அளவும் மற்றும் 12 மாதம் முதல் 60 மாதம் வரை குழந்தைகளுக்கு 2 மி.லி. அளவும் மேற்கண்ட முகாம்களில் வழங்கப்பட உள்ளது.

வைட்ட மின்A குறைபாட்டினால் பார்வைக் குறைபாடு, வயிற்றுப் போக்கு, தீவிர சுவாச தொற்று மற்றும் பள்ளி முன் பருவ குழந்தைகளிடையே (35 வயது) நோய்வாய்ப்பட்டு குழந்தைகள் இறப்பதை தவிர்க்கும் பொருட்டு வைட்டமின்A திரவம் வழங்கப்படுகிறது. எனவே,

பொது மக்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு அருகாமையில் உள்ள அங்கன்வாடி மையங்கள்,துணை சுகாதார நிலையங்களுக்கு அழைத்துச்சென்று தவறாமல் தவறாமல் வைட்டமின்A திரவம் கிடைப்பதை உறுதி செய்து, மேற்கண்ட நோய்கள் வராமல் தடுப்பதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்





செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெல்லிக்குப்பம் ஊராட்சியில் மின்சார வாரிய உதவி மின்பொறியாளர் அலுவலகத்தினை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்தா.மோ.அன்பரசன் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் ஒன்றிய குழுத்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் பியூரி, ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர் (எ) பார்த்தசாரதி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் பருவ மழையை எதிர்கொள்ள நல்லதம்பி எம். எல். ஏ., ஆய்வு!

திருப்பத்தூர் அக்.27

திருப்பத்தூர் தொகுதி திருப்பத்தூர் நகராட்சிக் குட்பட்ட வார்டு பகுதிகளில் தொடரும் பருவ மழை காரணமாக கழிவு நீர் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்களை தூர்வாரிதூய்மைப்படுத்திட அதிகாரிகளுடன் நகராட்சி வார்டு பகுதிகளில் மக்களிடம் அடிப்படை தேவைகள் குறித்து திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி நேரில் சென்று பணிகளை ஆய்வு செய்தார்.

மேலும் தேவையான நடவடிக்கைகளை உடனடி யாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதில் திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேஷ், திருப்பத்தூர் ஆணையர் S.சாந்தி பொறியாளர் நக்கீரன், நகர மன்ற உறுப்பினர் சுகுணா ராமேஷ், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், தேர்தல் பணி குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், நகராட்சி பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர் .



திருப்பத்தூரில் பருவ மழையை எதிர்கொள்ள நல்லதம்பி எம். எல். ஏ., ஆய்வு

## ஒசூர் அருகே
## மாநில எல்லை வனப்பகுதிக்குள் வந்துள்ள சிறுத்தைகள் : கிராம மக்கள் அச்சம்




ஒசூர்,அக்.27–
கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அடுத்த தளி அருகே மாநில எல்லையாக கும்மளாபுரம் வனப்பகுதி இருந்து வருகிறது..

இந்த வனப்பகுதிக்குள்ளாக கர்நாடகா மாநிலத்திலிருந்து சிறுத்தை இடம் பெயர்ந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது

வனப்பகுதி ஒட்டிய பண்ணை வீட்டின் மீது சிறுத்தை ஒன்று நள்ளிரவில் உலா வரும் சிசிடிவி காட்சிகளும் பதிவாகி உள்ளநிலையில்கும்மளாபுரம் மற்றும் அதன் சுற்றி உள்ள தம்மாபுரம், கும்மாளம், ஜீகூர், தேவர்பெட்டா உள்ளிட்ட கிராம மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

உண்மையிலேயே தமிழக வனப்பகுதிக்குள் சிறுத்தைகள் புகுந்துள்ளதா என வனத்துறையினர் உறுதிசெய்து,சிறுத்தைகளை பிடிக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



## அடையாறு ஆற்றின் முகதுவாரத்தினை அகலப்படுத்தும் சிறப்பு பணி!

சென்னை,அக்.27–
அடையாறு ஆற்றின் முக துவாரத்தில் உள்ள மண் படுகைகளை வடகிழக்கு பருவமழை துவங்கும் முன்பு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நீர்வளத்துறையினரால் செப்டம்பர் 2025 முதல் அக்டோபர் மாதம் வரை தூர்வாரி அகலப்படுத்தப்பட்டு வருகிறது. முகதுவாரம் மண் படுகையினால் மூடப்படும் நிகழ்வானது கடல் அலைகளினால் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வாகும். இந்நிலையில் வடகிழக்கு பருவ மழை தீவிரமானதால் முதலமைச்சர் நேற்று அடையாறு முக துவாரத்திற்கு திடீராய்வு மேற்கொண்டு நீர்வளத்துறையினரால் 3 பொக்லைன் கொண்டு தூர்வாரப்படும் அடையாறு ஆற்றின் முகதுவாரத்தை அகலப்படுத்தும் பணியினை கூடுதல் இயந்திரங்களை பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் மண் திட்டுக்களை அகற்றி அடையாறு வெள்ளநீர் விரைவாக வடிய ஆணையிட்டார். இதனைத் தொடர்ந்து 24.10.2025 அன்று மாலையில் இருந்து படிப்படியாக இயந்திரங்கள் எண்ணிக்கையினை உயர்த்தப்பட்டு தற்போது 12 பொக்லைன் இயந்திரங்களும் 4 ஜேசிபி (JCB) இயந்திரங்களுண்டு போர்க்கால அடிப்படையில் நீர்வளத்துறையினரால் அடையாறு ஆற்றின் முக துவாரத்தின் மண் திட்டுகளை அகற்றி அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளின் முன்னேற்றத்தினை நீர்வளத்துறை அரசு செயலர்ஜெயகாந்தன் முதன்மை தலைமைப் பொறியாளர் கோபால கிருஷ்ணன் தலைமைப் பொறியாளர் பொறிசி. பொதுபணி திலகம் கண்காணிப்பு பொறியாளர் க.செல்வகுமார் பார்வையிட்டு, இப்பணிகளின் முன்னேற்றத்தினை தொடர்ந்து கண்காணிக்க கண்காணிப்பு பொறியாளர் பொறி.க.செல்வகுமார் தலைமையில் சிறப்பு குழு அமைத்து செயற் பொறியாளர்கோ.ரா.ராதாகிருஷ்ணா, உதவி செயற்பொறியாளர் பொறி.மகேந்திரகுமார், மற்றும் உதவி பொறியாளர் பொறி. ஆர்.சதீஷ்குமார் அவர்களுடன் கிருஷ்ணா குடிநீர் சிறப்பு திட்ட கோட்டத்தில் இருந்து கூடுதலாக மூன்று களப் பொறியாளர்களை நியமித்து பணிகளை விரைந்து முடிக்க ஆவணம் செய்யப்படுகிறது

## சேவுகம்பட்டி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்!




வத்தலகுண்டு,அக்.27
வத்தலகுண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.சேவுகம்பட்டி பேரூராட்சி 9வது வார்டில் இருந்து 15வது வார்டு வரை உள்ள பொது மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் அண்ணாநகரில் உள்ள சிஎஸ்ஐ பள்ளியில் நடந்தது. இம்முகாமிற்கு திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா தலைமை தாங்கினார். நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி, பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன், திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் கனகதுரை, சேவுகம்பட்டி பேரூர் செயலாளர் தங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை செயல் அலுவலர் ரமேஷ்பாபுசெய்துவரவேற்றார். முகாமில் பேரூராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டன. 500க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இதில் 30க்கும் மேற்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு உடனடியாக ரேஷன் கார்டு, வருவாய் சான்றிதழ், மின்சார அட்டை ஆகியவை வழங்கப்பட்டன. மகளிர் உரிமைத் தொகை பெற விடுவிக்கப்பட்ட மகளிர் ஆர்வமுடன் மனுக்களை அளித்தனர். இம்முகாமில் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தெய்வராணிவிஜி, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் தவபாண்டியன், பாலமுருகன், தனபால், ஆண்டி, கோகிலா மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.



ஓர் அணியில் தமிழ்நாடு என ஒரு கோடிக்கு மேலான உறுப்பினர்களை கழகத்தில் இணைத்து தீர்மானம் உறுதி ஏற்பு செய்தனர். அதைதொடர்ந்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் கடல் மங்கலம் முதல்தோட்ட நாவல் வரை சாலையின் இரு புறங்களிலும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமா க.சுந்தர் கலந்து கொண்டு மரக்கன்றுகளைநடபணியைதுவக்கிவைத்தார் அதைதொடர்ந்து. சாலவாக்கம் ஊராட்சி மரம்நடும்நிகழ்வுநடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் . சாலவாக்கம் டி.குமார் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர்பேரூர் பாரிவள்ளல்.பேரூராட்சிமன்றதலைவர்.சசிகுமார் மாவட்ட கவுன்சிலர்.சிவராமன் கடல் மக்கள் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் விராசாமி ஒன்றிய கவுன்சிலர் மாயகிருஷ்னன்.தயாளன். மருத்துவபாடிஊராட்சிமன்றதலைவர் வெங்கடேசன் சாலவாக்கம் தலைவர் சத்தியாசக்திவேல் ஒன்றிய பொருளாளர் பாலமுருகன் யோகானந்தம். இளைஞர்அணிதுனண அமைப்ளர் ஆதிநாராயன்.துனனதலைவர் நந்தாகோகுலகிருஷ்னன்.கோபி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## ஐப்பசி 7-ம் நாள் வள்ளலார் சுத்த சன்மார்க்கக் கொடி கட்டிய திருநாள் குறித்து மாநிலத் தலைவர் ஜெய அண்ணாமலை அறிக்கை

விழுப்புரம் அக்.27
ஆன்மநேயம், அருள், சத்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்வை வழி நடத்தச்சொன்ன அருள் பெரும் ஜோதி ராமலிங்க வள்ளலார், கடந்த 1873ம் ஆண்டு அக்டோபர் 22ம் தேதி (ஸ்ரீ முக ஆண்டு ஐப்பசி மாதம் 7ம் நாள், புதன்கிழமை காலை 8.00 மணி அளவில் மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் சுத்த சன்மார்க்க நீதிக்கொடியை முதன் முதலாக கட்டி அறிமுகம் செய்தார். அன்று அங்கு கூடியிருந்தவர்களுக்கு வள்ளலார் நீண்ட உபதேசம் அருளிகூறியதாவது:

தமது நாபி முதல் புருவ மத்தி ஈறாக ஒரு நாடி இருக்கின்றது. அதன் நுனியில் உள்ள சவ்வு வெள்ளை மற்றும் மஞ்சள் நிறங்களில் காணப் படுகிறது. இதனை அடையாளமாகக் கொண்டு கொடியை கட்டுகிறோம். இனி எல்லாருக்கும் நன்மை தரும் அருள் அனுபவம் தோன்றும் என்று அருளினார். இதற்கு முன்னைய ஞானிகள் தங்கள் மார்க்கத்திற்குத் கொடி தனிக் கண்டதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, தம் சுத்த சன்மார்க்கத்திற்குத் தணிக் கொடியை கட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு முன்னிட்டு, உலகெங்கும் உள்ள சன்மார்க்க சங்க அன்பர்கள் சார்பில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. இந் நாளை நினைவு கூர்ந்து அகில உலக சமரச சுத்த சன்மார்க்க சங்க மாநிலத் தலைவர் விழுப்புரம் ஜெய அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில், உலகு கட்டியாளும் சுத்த சன்மார்க்க நீதிக் கொடி உலக மனித குலத்தின் சகோதர ஒற்றுமை, அருள் இன்பம், சமாதானம் ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.





தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் இனாம்மணியாச்சி கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு பிரதாப் உத்தரவின் பேரில்கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தை ஒட்டி வளாகம் முழுவதும் உள்ள பழைய வாசல் எதிரே( காட்டு மரம்) ஆணிவேர்கள் ஜேசிபி இயந்திரம் மூலம் அடியோடு பிடுங்கி அப்புறப்படுத்தப்பட்டன மேலும் சிறு கால்வாய்கள் அசுத்தமாக இருந்த இடங்கள் குண்டும் குழியுமாக பள்ளமாக இருந்த இடங்களை சமன்படுத்தப்பட்டது அப்போது கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாக மேலாளர் ருத்ரமூர்த்தி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் விஷ்ணு பிரசாத், அறிவுறுத்தலின்படி முன்னாள் தமிழ்நாடு தேசிய காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ் அழகிரி பிறந்த தினத்தை முன்னிட்டு கடலூர் மத்திய மாவட்ட தலைவர் திலகர் தலைமையில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வார்டு செயலாளர் யூசுப்தீன்க்கு புதிய ஆட்டோ வழங்கப்பட்டது உடன் நகர தலைவர் ரவிக்குமார். நகர செயலாளர் பாரூக். மற்றும் நிர்வாகிகள், நஜிர், முஸ்தபா, அன்சாரி, ஹபிபுர் ரஹ்மான், ஜாபர் அலி, தவ்பிக், ஜெமில் அகமது, அபூபக்கர், பண்ருட்டி தொகுதி இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் ஆசிக், நெல்லிக்குப்பம் நகர இளைஞர் காங்கிரஸ் துணை தலைவர் அன்சாரி, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற
## "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி செய்தியாளர்களுடன் சென்று நேரில் பார்வையிட்டார்



அரியலூர்,அக்.27
அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், விக்ரமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி செய்தியாளர்களுடன் சென்று நேரில் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம். இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 02.08.2025 அன்று காணொளி காட்சி மூலம் துவங்கி வைக்கப்பட்டது.

அதன்படி இன்றையதினம் விக்ரமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார். மேலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் 01 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 மதிப்பில் திருமண உதவிதொகை, 01 பயனாளிக்கு ரூ.5000 மதிப்பில் கல்வி உதவித்தொகை, 04 பயனாளிகளுக்கு தலா ரூ.1200 மதிப்பில் ஓய்வூதியங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைசார்பில் 02 மாற்றுத்திறன்நபர்களுக்கு உதவிகள் பதிவு புத்தகங்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், 03 நபர்களுக்கு மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, வழங்கினார்.

மேலும், நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமில் சிறப்பு பிரிவு மருத்துவர்களான எலும்பு முறிவு மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் பொது மருத்தும் மற்றும் சர்க்கரை நோயியல் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர், பல் மருத்துவர், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், நரம்பியல் மருத்துவர், தோல்நோய் மருத்துவம், இருதயவியல் மருத்துவர், கதிரியியல் மருத்துவர், ஆகியோர் இம்மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும், எக்கோ கார்டியோகிராம், அல்ட்ராசோனாகிராம், நடமாடும் எக்ஸ்ரே வாகனம், மற்றும் இரத்த பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இம்மருத்துவ முகாம்களை பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இந்த செய்தியாளர்கள் பயணத்தின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.மணிவண்ணன், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துக்கிருஷ்ணன், மாவட்ட நிலை அலுவலர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சிதம்பரம் நகர புதிய காவல் ஆய்வாளர் பொறுப்பேற்பு!



சிதம்பரம், அக் 27
சிதம்பரம் நகர புதிய காவல் ஆய்வாளர் வி.சிவானந்தன் பொறுப்பேற்றார். இதற்கு முன்பு திருப்பத்தூர் ஸ்பெஷல் பிரான்ச் சிஐடி பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய இன்ஸ்பெக்டர் சிவானந்தத்தை சப் இன்ஸ்பெக்டர்கள், காவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக சிதம்பரம் டிஎஸ்பி பிரிதிப்பை சந்தித்து வாழ்த்து பெற்றார்

## பந்தலூரில் அயோடின் உப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

பந்தலூர்,அக்.27
பந்தலூர் பவித்ரா தட்டச்சு பயிற்சிமையத்தில் அயோடின் உப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உலக அயோடின் பற்றாக்குறை தடுப்புதினத்தை முன்னிட்டு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆல் தி சில்ட்ரன் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பவித்திரா தட்டச்சு பயிற்சி மைய முதல்வர் எபினேஷர் தலைமை தாங்கினார். மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌஸாத், ஆல்ஃபா திறன் பயிற்சி மைய முதல்வர் ரஞ்சன் விக்னேஷ், அம்பேத்கார் மக்கள் இயக்கம் செயலாளர் இந்திரஜித், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வட்டார மருத்துவ அலுவலர் கதிரவன் பேசும்போது அயோடின் என்பது நமது உடலுக்கு தேவையான நுண்ணூட்ட சத்து ஆகும். இது கருவில் இருக்கும் குழந்தை முதல் இறப்பு வரை மனிதர்களுக்கு மிகவும் அத்தியாவசிமானது ஆகும். இதனால் மக்கள் அதிகம் அனைத்து தரப்பினரும் பயன்படுத்தும் உப்பில் சேர்த்து வழங்கப்படுகிறது. இது கடல் சார் உணவுகளில் அதிகம் இருந்தாலும் அனைத்து தரப்பினரும் கடல் உணவுகளை, அசைவ உணவுகளை எடுத்துகொள்வது இல்லை இதனால் பலருக்கும் அயோடின் பற்றாக்குறை ஏற்பட்டு தைராய்டு சுரப்பி செயல்பாடுகள் பாதிக்கப்படுகிறது இதனால் முன்கழுத்து கழலை, மந்த தன்மை, உடல் வளர்ச்சி இனமை, சிந்திக்கும் திறன் குறைவு, கர்ப்ப காலத்தில் குழந்தை முழு வளர்ச்சி இன்மை, குறை பிரசவம், கரு கலைதல், பெண்களுக்கு மாதவிடாய் சார்ந்த பிரச்சனைகள் உள்ளிட்ட பலவேறு பாதிப்புகள் ஏற்படுகின்றது. அனைவருக்கும் அயோடின் நுண்ணூட்ட சத்து கிடைக்க வேண்டும் என்பதை உறுதி படுத்த சுகாதார ஆய்வாளர்கள் மூலம் சுழற்சி முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.

மேலும் பதப்படுத்துதல் தேவைக்கு பயன்படுத்தும் உப்பில் அயோடின் சேர்க்கபடாது எனவே அந்த வகை உப்பை உணவுக்கு பயன்படுத்த கூடாது. மக்கள் உப்பு வாங்கும் போதே அயோடின் கலந்த உப்புதானா என்பதை உறுதிப்படுத்தி வாங்கி பயன்படுத்துவதன் மூலம் அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க முடியும் என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது அயோடின் சராசரியாக 150 மைக்ரோ கிராம் முதல் 250 மைக்ரோ கிராம் அளவு தினசரி தேவைபடுகிறது. எனவே தொடர்ந்து அயோடின் கலந்த உப்பினை பயன்படுத்த வேண்டும். மேலும் இந்து உப்பு என்பது இமயமலை அடிவாரத்தில் இருந்து எடுக்கப்படுவது. இவை மருத்துவ பயன்பாட்டிற்கானது. அதனால் அதை உணவுக்கு பயன்படுத்த கூடாது. தற்போது அரசு மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் அரசு உப்பும், கூட்டுறவு துறை சார்பில் நெய்தல் கூட்டுறவு உப்பும் தரமான முறையில் தயாரித்து மானிய விலையில் வழங்க படுகிறது இவற்றை வாங்கி பயன்படுத்தி கொள்ளலாம் என்றார்.

நிகழ்ச்சியில் தட்டச்சு பயிற்சி மையம் மற்றும் ஆல்ஃபா திறன் பயிற்சி மைய மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். தட்டச்சு பயிற்சி மைய ஆசிரியர் அம்பிகா வரவேற்றார். முடிவில் ஆல் தி சில்ட்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் நன்றி கூறினார்.



திருப்பூர் Enkay எண்டர்பிரைசஸ் செண்பகம் டெக்ஸ்டைல்ஸ் பிரதர்ஸ் பாலசுப்பிரமணியம் சகோதரர் கூத்தபெருமாள் இல்ல திருமண விழாவில் திருப்பூர் முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு நமது உறவுகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். உடன் ஸ்ரீரங்கம் பழனியான்டி முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன் இதில் முத்தரையர் ஒருங்கிணைப்பு குழுவை சேர்ந்த அருண்மொழிவர்மன் தர்மராஜ் வடிவேல் ராஜாமணி ஏ ஆர் பாண்டி அம்பலம் வெங்கடாசலம் பாலசுப்பிரமணியம் உடன் கலந்து கொண்டனர்.